Register No. | | | | | | | | |

**FA3E**

**5266–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five-year Regular Course)

Second Year – Third Semester

FAMILY LAW – I

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the various sources of Hindu Law.

   இந்து சட்டத்தின் பல்வேறு மூலாதாரங்களை விளக்குக.

2. Discuss the law of divorce as applicable to Muslims and state the present validity of Triple Talak.

   முகமதியர்களுக்கு பொருந்தக்கூடிய மணமுறிவு சட்டத்தினை விவாதிக்க. தற்பொழுது முத்தலாக்கின் செல்லும் தன்மையை குறிப்பிடவும்.

3. Discuss the essential requirements and formalities for a Christian Marriage.

   ஒரு கிறிஸ்துவ திருமணத்திற்கு அவசியமான தேவைகளையும், கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of "Relation Back" with reference to the law of adoption. How is this doctrine affected by the provisions of the Hindu Adoptions and Maintenance Act?

   மகவேற்பு சட்டம் தொடர்பாக "பின்னோக்கிப் பொருந்தும்" கோட்பாட்டை விளக்குக. இந்து மகவேற்பு மற்றும் பராமரிப்புச் சட்டப் பிரிவுகளால் இக்கோட்பாடு எவ்வகையில் பாதிக்கப்பட்டுள்ளது.

5. Discuss the law of divorce applicable to Christians.

கிருஸ்துவர்களுக்கு பொருந்தக் கூடிய மணமுறிவுச் சட்டத்தினை விவாதிக்கவும்.

6. Discuss the essential conditions for a Muslim marriage.

இஸ்லாமிய திருமணத்திற்கு இன்றியமையாத முக்கியக் கூறுகளை பற்றி விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Voidable marriage

தவிர்தகு திருமணம்

(b) Muta Marriage

முத்தா திருமணம்

(c) Divorce by mutual consent

ஒருவருக்கொருவர் இசைவு பேரிலான மண முறிவு

(d) Testamentary guardian

உயில்வழிக் காப்பாளர்

(e) Illatom adoption

இல்லாட்டம் தத்தெடுப்பு

(f) Suyamariyathai Marriage

சுயமரியாதை திருமணம்

(g) Maintenance Pendente lite

வழக்கிடை வாழ்க்கை பொருளுதவி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', a Hindu woman, married a Hindu male 'B'. 'B' died. After that 'A' sued B's father for claiming maintenance. Decide.

'அ' என்னும் இந்து பெண் 'ஆ' என்னும் இந்து ஆணை திருமணம் செய்தார். 'ஆ' இறந்து விட்டார். பின்னர் 'அ', 'ஆ'-வின் தந்தையிடமிருந்து வாழ்க்கைப் பொருளுதவி கோரி வழக்குத் தொடுத்தார். தீர்மானிக்கவும்.



9. 'A' a Shia woman marries a Christian male. Is the marriage valid? Will it make any difference if 'A' is a Sunni woman?

ஷியா பிரிவைச் சார்ந்த 'அ' என்ற பெண் ஒரு கிறித்துவரை திருமணம் செய்கிறார். இத்திருமணம் செல்லும் நிலையதா? 'அ' சுன்னி பிரிவைச் சார்ந்தவராக இருந்தால் வேறுபாடு ஏதேனும் ஏற்படுமா?

10. A Hindu wife becomes a Christian and lives separately from her husband. The husband files a suit for restitution of conjugal rights. The wife pleads her conversion as a defence. Decide whether she can succeed?

ஒரு இந்து மனைவி கிருத்துவராக மதம் மாறி கணவனைப் பிரிந்து தனியாக வாழ்கிறார். அவளது கணவன் தாம்பத்திய உரிமை கோரும் வழக்கை நீதிமன்றத்தில் சமர்பிக்கின்றார். தனது மத மாற்றத்தை எதிர்வாதமாக அம்மனைவி கூறுகிறார், அவர் வெற்றி பெறுவாரா என்பதை முடிவு செய்க.